பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 26 சனிக்கிழமை 11.09.2021 கதிர் 174

## வெளிநாட்டுக் கப்பலொன்றில் ஹெரோயினுடன் 9 பேர் கைது

ஒரு தொகை ஹெரோயின் போதைப் பொருளை நாட்டுக்கு கடத்தி வந்த வெளிநாட்டு கப்பல் ஒன்று நேற்றிரவு சுற்றிவளைக்கப்பட்டது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதன்போது மட்டக்களப்பு தெற்கு 2

# சிவாஜிலிங்கத்துக்கும் கொரோனா!

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கத்துக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இன்று கொரோனா அறிகுறிகள் காணப்பட்ட நிலையில் வல்வெட்டித்துறை ஊறணி வைத்திய சாலைக்கு அவர் சென்றிருக்கின்றார்.

அங்கு அவருக்கு அன்டிஜன் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டதில் கொரோனாத் தொற்று உறுதி செய் யப்பட்டுள்ளது.

அதையடுத்து நோயாளர் காவு வண்டிமூலம் அவர் கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலையத் துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.



## வீட்டில் மரணிப்பதை தடுக்க நடவடிக்கை

### சுகாதார பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் வீட்டில் மரணமடைவதைத் தடுப்பதற்கு உள்ளூர் சுகாதார அதிகாரிகளால் மாற்றுத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

- இவ்வாறு சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

வீட்டில் ஏற்படும் கொரோனா இறப்புகளைக் குறைப் பதற்கான வழிமுறைகள் குறித்த கேள்விக்கு ஊடகங்க ளிடம் பதிலளிக்கும் விதமாகவே அவர் 2


# வவுனியா பேரவலத்துக்கு டெல்டா வைரஸே காரணம்

## ஒரே நாளில் 35 பேருக்குத் தொற்று உறுதி

(வவுனியா நிருபர்)

**வவுனியா மாவட்டத்தில் இரண்டு வாரங்களுக்கு மேலாக திடீரென கொரோனாத் தொற்றாளர்களின் எண் ணிக்கையும், கொரோனா மரணங்களின் எண்ணிக் கையும் அதிகரித்துள்ளது. இந்நிலையில், இம்மாவட் டத்தில் இந்தப் பேரவல நிலைக்குக் கொரோனாவின் திரிவு வைரஸான டெல்டாவே காரணம் என்று கண்டறி யப்பட்டுள்ளது.**

**நேற்று மாத்திரம் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் 35 பேருக்கு டெல்டா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகா தாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.**



2

# ரஞ்சனுக்கு மன்னிப்பு வேண்டி கோட்டாவுக்கு சந்திரிகா கடிதம்



சிறைத்தண்டனை அனு பவித்துவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் ரஞ்சன் ராம நாயக்கவுக்குப் பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் எனக் கோரி, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

சுமார் எட்டு மாதங்களாகச் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என நாட் டின் மூத்த பிரஜை மற்றும் முன் னாள் அரச தலைவர் என்ற ரீதி யில் கேட்டுக்கொள்வதாக சந்தி ரிகா தனது கடிதத்தில் 2

## மேலும் 639 பேர் சிக்கினார்கள்!

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதி முறைகளை மீறிய குற்றச்சாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் 639 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 40 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ இத னைத் தெரிவித்தார்.

கொழும்பில் இன்று ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள காணொலிப்பதிவிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- 2

## யாழில் கசிப்பு உற்பத்தி; நால்வர் மடக்கிப் பிடிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செம்மணிப் பகுதியிலுள்ள சிறுகாட்டில் நூதன மான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நால்வரைப் யாழ். பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.

செம்மணிப் பகுதியிலுள்ள சிறு பற்றை காட்டில் கோடா ஊற வைத்து வீட்டு பாவனைப் பொருள்களின் உதவியுடன் வடித்து ஊரடங்கு நேரம் சந்தைப்படுத்திய நால்வரே இன்று அதிகாலை ஒரு மணிக்கு மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

இதன்போது 20 லீற்றர் கசிப்பு மற்றும் 60 லீற்றர் கோடாவு டன் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்திய பொருள்களும் பொலி ஸாரால் மீட்கப்பட்டன.

## பாரதியாரின் 100ஆவது நினைவு தினம் யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தில்



(இ.கலையமுதன்)

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நூறாவது ஆண்டு நினைவு தினம் யாழ்ப்பாணத்திலுள்ள இந் தியத் துணைத்தூதரகத்தில் இன்று காலை நடைபெற் றது.

இதன்போது மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் உருவப்படத்துக்கு யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜா மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இணையவழியில் நடைபெற்ற விசேட நிகழ்வில் அரசியல் தலைவர்களும் முக்கியஸ்தர்களும் 2

## மேலும் 639 பேர் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறுவோரைக் கைதுசெய்யும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது.

இந்நிலையில், தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் 639 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 40 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்படி கடந்த மாதம் 20ஆம் திகதி தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட காலப்பகுதியில் இருந்து இதுவரையான காலப்பகுதியில், தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 13 ஆயிரத்து 83 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 1,445 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் தொடக்கம் இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மொத்தமாக 69 ஆயிரத்து 288 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் அநாவசியமான முறையில் மேல் மாகாண எல்லையைக் கடக்க முற்பட்ட 190 வாகனங்களில் பயணித்த 357 பேர் நேற்று திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில், 124 பொலிஸார் மற்றும் 77 இராணுவத்தினர் இணைந்து சோதனைகளை மேற்கொண்டுள்ளனர். இதன்போது தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி பயணித்த 190 வாகனங்களில் பயணித்த 357 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்திலிருந்து வெளியேற முற்பட்ட 658 வாகனங்களில் வந்த 1,077 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அதேபோன்று மேல் மாகாணத்துக்கு உட்பிரவேசிக்க முற்பட்ட 672 வாகனங்களில் வந்த 1,162 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறுவோர் தொடர்பில் கண்டறிவதற்காக 323 பொலிஸார் நேற்றுக் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சோதனை நடவடிக்கைகளின் போது 6 ஆயிரத்து 470 வாகனங்களும் 9 ஆயிரத்து 723 பேரும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்நிலையில், தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலத்தில் பயணிப்பதற்கான போதிய ஆவணங்களின்றி பயணித்த 873 வாகனங்களில் வந்த 1,369 பேர் தங்களது சொந்த இடங்களுக்கே திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் - என்றார்.

## ரஞ்சனுக்கு மன்னிப்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நடிகராக, ஒரு சமூக சேவையாளராக, ஒரு அரசியல்வாதியாக ரஞ்சன் ராமநாயக்க, பொதுமக்களுக்கான சேவைகளை ஆற்றிவந்த ஒருவர் எனவும் சந்திரிகா தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு குற்றத்துக்காக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 4 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாரதியாரின் 100 ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டு மரியாதை செலுத்தினர்.

ஒவ்வொரு முறையும் பாரதியாரின் நினைவு தினத்தன்று யாழ்ப்பாணம் - அரசடி வீதியில் அமைந்துள்ள பாரதியாரின் சிலைக்கு மரியாதை செய்யும் நிகழ்வு இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறுவது வழமையாகும்.

கொரோனா தனிமைப்படுத்தல் ஊரடங்கு காரணமாக இம்முறை நினைவு தின நிகழ்வுகள் இணையவழியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா பேரவலத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனா நோயாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்றிரவு வெளியாகின. அதில் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 35 பேருக்கு டெல்டா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றுக்கு உள்ளானவர்களைச் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, டெல்டா வைரஸ் தொற்று பரவல் அடைவதால் மக்கள் விழிப்புணர்வுடன் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர்.

## வீட்டில் மரணிப்பதை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் வீட்டில் மரணமடைவதைத் தடுப்பதற்கு உள்ளூர் சுகாதார அதிகாரிகளால் மாற்றுத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

ஏனெனில், வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுவதற்கு முன்னர் இறக்கும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. தொற்றுநோயியல் பிரிவினால் வெளியிடப்பட்ட தரவுகளின்படி, அனைத்து கொரோனா இறப்புகளில் 19.5 வீதமானவை வீட்டிலும் வைத்தியசாலையில் சேர்க்கப்படுவதற்கு முன்பும் நிகழ்கின்றன.

செப்டெம்பர் 3ஆம் திகதி வரையான நிலைவரப்படி, கொரோனாவின் மூன்றாம் அலையின்போது 1,339 தொற்றாளர்கள் தங்கள் வீடுகளில் இறந்துள்ளனர். மேலும் 573 பேர் வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளனர்.

கம்பஹா மாவட்டத்திலேயே இவ்வாறான இறப்புக்கள் அதிகளவில் பதிவாகியுள்ளன. முடக்கத்தின்போது அம்புலன்ஸ் வாகனங்களை அழைப்பதில் சிரமங்கள் இருக்கலாம். இதுவே வீட்டில் சம்பவிக்கும் இறப்புகளுக்குப் பிரதான காரணம் - என்றார்.

## வெளிநாட்டுக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடலில் இலங்கை கடற்படை மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் குறித்த போதைப்பொருள் தொகை மீட்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

இதன்போது கப்பலில் பயணித்த 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அம்பலமாகிறது கோரமுகம்

அரச நிர்வாகத்தின் உயர் மட்டத்தில், சிவில் நிர்வாக அதிகாரிகள் பலர் அடுத்தடுத்து பதவிகள், பொறுப்புகளை விட்டு விலகும் ராஜினாமா அத்தியாயம் தொடர்ந்து அரங்கேறி வருவது அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஆட்சி அதிகாரத் தரப்பின் தீர்மானங்கள், முடிவுகள் முறையற்ற விதத்தில் திணிக்கப்படுவது சீற்றமும் விசனமு மடைந்துள்ள அதிகாரிகள், வேறுவழியின்றி பதவிகளைத் துறக்கும் நிலைக்கு உள்ளாகி வருகின்றனர் என்று குற்றம் சுமத்தப்படுகிறது.

சிவில் நிர்வாகத் துறைக்குள் முன்னாள் படை அதிகாரிகளை முறையற்ற விதத்தில் நியமித்து, அதுவரை ஒழுங்காக இயங்கிக்கொண்டிருந்த சிவில் நிர்வாகத்தை எதேச்சாதிகாரக் கட்டளைகளுக்குப் பணியும் ஓர் அடிமை நிர்வாகம் போல மாற்றுவதற்கு அரசுத்தரப்பு ஆயத்தம் செய்த போதே இப்படியாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

கொவிட் தொற்றுத் தொடர்பான தடுப்பு நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட மூத்த அரச நிர்வாகிகளும், மருத்துவ – சுகாதார நிபுணர்களுமே இப்படிப் பதவி விலகுவோர் பட்டியலில் அடங்குகின்றமை பலத்த குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கின்றது.

சுகாதார சேவைகள் ஆணையாளர் நாயகத்திற்கு உரிய ஆலோசனைகளை வழங்கும் தொழில் நுட்ப அணித் தொகுதிக்கான உறுப்பினர் பதவியிலிருந்து தொற்றுநோய் மருத்துவமனையின் (ஐ.டி.எச்சின்) சிரேஷ்ட நிபுணத்துவ ஆலோசனை மருத்துவர் ஆனந்த விஜயவிக்ரம அண்மையில் திடீரென பதவி விலகியுள்ளார். அதே குழுவில் இருந்த மயக்க மருத்துவ ஆலோசனை நிபுணர் மருத்துவர் அசோக குணரத்னவும் தொடர்ந்து ராஜினாமா செய்திருக்கிறார்.

கொவிட் பரவலைத் தடுப்பது தொடர்பான ஆலோசனை சபையில் பரிந்துரைக்கு மாறாக, வேறு உள்ளகக் குழுக்களின் முடிவுகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன, அதனால் ஏற்படக் கூடிய விளைவுகள், விபரீதங்களுக்குத் தாங்கள் பொறுப்பேற்க முடியாது என்ற சூழலில், இந்த அதிகாரிகள் ராஜினாமா செய்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

'ஸ்புட்னிக் – வி' தடுப்பூசியை கண்டியில் ஒரே டோஸாக ஏற்றி முடிப்பதற்கும், அம்பாந்தோட்டையில் 20 முதல் 29 வயதில் இருப்போருக்கு பைஸர் தடுப்பூசிகளை ஏற்றுவதற்கும் எடுக்கப்பட்ட முடிவுகள் சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப ஆலோசனை குழுக்களின் தீர்மானம் மற்றும் பரிந்துரைகளுக்கு மாறானவை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இதனால் குழப்பம் அடைந்துள்ள சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப குழுவின் அங்கத்தவர்களான மருத்துவ நிபுணர்களும் உயர் அதிகாரிகளும் அத்தகைய பொறுப்புகளில் இருந்து தங்களை விடுவித்துக் கொள்கின்றனர்.

ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பியல் மருத்துவத்துறை நிறுவனர் பேராசிரியர் நீலிகா மாளவிகே, கொழும்பு வடக்கு (றாகம) வைத்தியசாலையின் சமூக மருத்துவ நிபுணர் பேராசிரியர் ஏ.பத்மேஸ்வரன் ஆகியோர் தொற்றுத் தடுப்புக்கான சுயாதீன ஆலோசனைக் குழுவில் இருந்து பதவி விலகியுள்ளனர்.

இன்னொரு இழுபறியில் உயிரியல் பூங்காக்களின் பணிப்பாளர் நாயகம் இஷினி விக்கிரமசிங்க தனது ராஜினாமா கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

இதேசமயம் நாட்டின் மூத்த பொருளாதார நிபுணரும், அத்துறையில் எல்லோராலும் பெரிதும் மதிக்கப்படுபவருமான பேராசிரியர் டபிள்யூ.டி. லக்ஷ்மன் தமக்கு நேர்ந்த விரும்பத்தகாத நிகழ்வுகளை அடுத்து தாம் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியிலிருந்து விலகுகிறேன் என அறிவித்துள்ளார்.

இந்த எல்லா ராஜினாமாக்களின் பின்னாலும் அரச நிர்வாகத்தினுடைய அரூபக் கரங்களின் எதேச்சாதிகாரக் கெடுபிடித்தனமே வெளிப்பட்டு நிற்கிறது என்பது கண்கூடு. கோட்டா அரசு தனது உண்மை முகத்தை – அதன் கோர வடிவத்தை – சுயரூபத்தை – வெளிக்காட்ட ஆரம்பித்துவிட்டது என்பதைத்தான் இந்த ராஜினாமாக்கள் நமக்கு எடுத்துக் காட்டி நிற்கின்றன.

# பாரதியாரின் சிரார்த்த தினம் இன்று அவரை நினைவு கூர்கின்றார் விக்கி

இன்று மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நினைவு நாள். 11.12.1882 இல் பிறந்த சுப்பிரமணிய பாரதியார் தமது 38 ஆவது வயதில் 11.09.1921 இல் இறைவனடி சேர்ந்தார். அவரின் குறுகிய வாழ் நாள்களினுள் அவர் செய்து முடித்தவை ஏராளம். ஒரு புலவராய், எழுத்தாளனாய், பத்திரிகையாளராய், சுதந்திர வீரராய், சமூக சீர்திருத்தவாதியாய், பன்மொழியாளராய் அவர் திகழ்ந்தார். பெண் விடுதலைக்காகப் போராடினார்.

-இவ்வாறு தெரிவித்துள்ளார் நீதியரசரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி. விக்னேஸ்வரன்.

பாரதியாரின் நினைவு தினத்தை முன்னிட்டு அவர் வழங்கியுள்ள செய்திக் குறிப்பில் -

குழந்தைகள் திருமணத்தை எதிர்த்தார். பிராம்மணராய் பிறந்தும் பிராம்மணர்கள் வாழ்க்கை முறையிலும் இந்துமத சடங்குகளிலும் இருந்த பிழைகளை வெளிப்படையாகச் சுட்டிக் காட்டினார். இந்து மக்களிடையே காணப்பட்ட தாழ்த்தப்பட்டோரையும் மற்றும் முஸ்லிம் சகோதரர்களையும் அணைத்து அவர்களுக்கு ஒரு சமூக அந்தஸ்தைப் பெற்றுக் கொடுக்கப் பாடுபட்டார்.

அவர்தம் எழுத்துக்கள் அரசியல், சமூகம், சமயம் போன்றவற்றில் மக்களின் சிந்தனையைக் கிளர உதவினார். தமிழ்மொழி உரைநடைக்கு முன்னோடியாய் அவர் திகழ்ந்தார். கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்ற வகையில் இவரைப்பற்றி கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார் -

'ஊர் அறிய நாடு அறிய
உண்மை எல்லாம்
ஒருவரையும் அஞ்சாமல்
எடுத்து உரைத்தோன்
ஆரமுதம் அனைய கவி
பாடித் தந்தோன்
அமரகவி என்று அவரும்
புகழ்பெற்றோ
சீர் உயரும் தமிழ் மக்கள்
செய் தவத்தால்
தென்னாடு சிறக்க வந்த
சுப்பிரமணிய
பாரதியின் பெயர் போற்றி
ஏத்துவோமே
பாமாலை புனைந்து
அவர்க்குச் சாத்துவோமே'

கவிமணியுடன் நாமும் இன்று பாரதியாரை நினைவில் இருத்துவோமாக!

இதே செப்டெம்பர் 11 ஆம் திகதியன்று அதாவது 1893 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதியன்று பாரதி பிறந்து 11 வருடங்களின் பின், அமெரிக்கா சிக்காக்கோ நகரில் ஒரு முக்கிய நிகழ்வொன்று நடந்தது. அன்று தான் 'எனதருமை அமெரிக்க சகோதரிகள் சகோதரர்களே' என்று விளித்த சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ சர்வ மத சம்மேளன நிகழ்வில் அழியாப் புகழ் சூடிக் கொண்டார்.

பாரதத்தின் இவ்விரு புதல்வர்களும் நவீன உலகத்துக்கு புராதன பாரதத்தை அறிமுகம் செய்தவர்கள். அவர்கள் நாமம் நீடூழிகாலம் வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்றேன். - என்று தெரிவித்தார்.

# புத்தளத்தில் காணாமற்போன மீனவர் மன்னார் கடலில் சடலமாக மீட்பு

புத்தளம் கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்று காணாமல்போன மீனவர் ஒருவர் நேற்று (வெள்ளிக்கிழமை) மதியம் மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சிலாவத்துறை சவேரியார்புரம் கடற்கரையிலிருந்து சுமார் 500 மீற்றர் தொலைவில் கடலில் சடலமாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்ட மீனவர் புத்தளம் வத்தளங்குன்று பகுதியைச் சேர்ந்த ராமையா ஜேசுதாசன் (வயது-47) என்பவர் எனத் தெரியவந்துள்ளது.

சிலாவத்துறை பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை மீன் பிடிக்க கடலுக்குச் சென்றுள்ளனர். இதன் போது சடலம் ஒன்று கடலில் மிதப்பதைக் கண்ட நிலையில் சிலாவத்துறை கடற்படையினருக்குத் தகவல் வழங்கினர்.

கடற்படையினர் மீனவர்களின் உதவியுடன் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் குறித்த சடலத்தை மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர். இதன் போதே சடலமாக மீட்கப்பட்டவர் புத்தளம் கடற்பரப்பில் மீன் பிடிக்கச் சென்று காணாமல் போன புத்தளம் வத்தளங்குன்று பகுதியைச் சேர்ந்த ராமையா ஜேசுதாசன் (வயது-47) எனத் தெரியவந்துள்ளது. கடந்த 8 ஆம் திகதி குறித்த மீனவர் புத்தளம் கடற்பரப்பிலிருந்து மீன் பிடிக்க கடலுக்குச் சென்ற நிலையிலேயே காணாமல்போயுள்ளார். இந்நிலையிலேயே இரு தினங்கள் கழிந்த நிலையில் நேற்றைய தினம் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சிலாவத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு மஸ்கெலியாவில் தீவிர கண்காணிப்பு பிரிவு

நுவரெலியா- மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கொரோனாத் தொற்றாளர்களுக்கான தீவிர கண்காணிப்பு பிரிவு நேற்று (வெள்ளிக்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.

ஹற்றன்- கொட்டகலை ரொட்டரக்ட் கழகம் மற்றும் அல்முனை மொரட்டுவ பல்கலைக்கழக ரொட்டரக்ட் கழகம் அனுசரணையில், இந்த கண்காணிப்பு பிரிவு புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

இந்த கண்காணிப்பு பிரிவு, மஸ்கெலியா வைத்தியசாலை பொறுப்பதிகாரி எம்.ஆர்.எம் பாஹிமா தலைமையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையில், பல மில்லியன் ரூபா செலவில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்டவர்கள் சுமார் 200 பேர், தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை அரசாங்கமும் கொடை வள்ளளார்களும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.


மேலும், குறித்த வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகள் நிறைவு பெறும் தருவாயில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஆயுர்வேத வைத்தியசாலை கட்டில்களில் 48 சதவீதம் தொற்றாளர்களுக்கு சிகிச்சை

ஆயுர்வேத வைத்தியசாலை கட்டமைப்பிலுள்ள கட்டில்களில் நூற்றுக்கு 48 சதவீதத்தை கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக ஆயுர்வேதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆயுர்வேத வைத்தியசாலை கட்டமைப்பில் 5 ஆயிரம் கட்டில்கள் காணப்படுகின்றன.

இதற்கமைவாக ஆயுர்வேத வைத்தியசாலைகளின் கட்டில்களில் ஒரு தொகுதியை கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக ஒதுக்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக ஆயுர்வேத ஆணையாளர் வைத்தியர் தம்மிக்க அபேகுணவர்தன ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். முதற்கட்ட நடவடிக்கையாக பொரளை ஆயுர்வேத வைத்தியசாலை உள்ளிட்ட 16 வைத்தியசாலை கட்டமைப்பில் உள்ள 1,300 கட்டில்கள் கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்குத் தயார் நிலையில் இருக்கின்றன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# ‘போட்டி சண்டையாக மாறிவிடக் கூடாது’ சீன – அமெரிக்க ஜனாதிபதிகள் பேச்சு!

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பதவியேற்ற பிறகு இரண்டாவது முறையாக, சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங்குடன் பேச்சு நடத்தியுள்ளார்.

உளவு, வர்த்தகம் மற்றும் கொரோனா பெருந்தொற்று உருவான விதம் ஆகிய காரணங்களால் சீனா – அமெரிக்கா உறவு மோசமாகியுள்ள நிலையில், இந்த பேச்சு முக்கியத்துவம் பெறுகின்றது.

தொலைபேசியில் உரையாடிய இரு தலைவர்களும், விரிவான, கேந்திர ஆலோசனைகளை மேற்கொண்டனர் எனவும், ஒத்த கருத்துடைய விடயங்கள், மாறுபடும் வியங்கள் என இரண்டையும் விவாதித்தனர் எனவும் வெள்ளை மாளிகை அறிக்கை தெரிவிக்கிறது.

இதுதொடர்பாக வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில், இரு நாடுகளுக்கும் மத்தியில் இருக்கும் போட்டி சண்டையாக மாறிவிடக் கூடாது என்பதை உறுதி செய்வதற்கு இரு நாடுகளுக்கும் உள்ள பொறுப்பு குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன அரச ஊடகமான சிசிடிவி, ‘இந்த தொலைபேசி அழைப்பு எதேச்சையானது என்றும், ஆழமானது என்றும் தெரிவித்துள்ளது. விரிவான கேந்திர பேச்சு நடைபெற்றதாகவும் இருதரப்பு சார்ந்த பல விடயங்களை பேசியனர் எனவும்’ தெரிவித்துள்ளது.

சீனா – அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே நல்ல உறவை பேண முடியுமா என்பது உலகின் எதிர் காலத்திற்கும் முக்கியமானது என ஜனாதிபதி ஷி ஜின்பிங் தெரிவித்தனர் என சிசிடிவி தெரிவித்துள்ளது.

# ஆப்கான் முன்னாள் துணை ஜனாதிபதியின் சகோதரர் தலிபான்களால் தூக்கிலிடப்பட்டார்



தலிபான் எதிர்ப்பு பஞ்ஷீர் படைகளின் தலைவர்களில் ஒருவரான முன்னாள் ஆப்கானிஸ்தான் துணை ஜனாதிபதி அம்ருல்லா சலேவின் சகோதரர் ரோஹுல்லா சலேவை தலிபான்கள் தூக்கிலிட்டுகொலைசெய்தனர்எனஅவரது மருமகன் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

அம்ருல்லா சலே தலைமையிலான படைகளில் கட்டுப்பாட்டில் இருந்து பஞ் ஷீர் பள்ளத்தாக்கை தலிபான்கள் கைப்பற்றிய சில நாள்களின் பின்னர் அவர் தூக்கிலிடப்பட்டார்.

அவர்கள் என் மாமாவை தூக்கிலிட்டுக் கொன்றுவிட்டனர் என எபதுல்லா சலே ரொய்ட்டர்ஸ் சர்வதேச செய்தி முகாமையிடம் தெரிவித்துள்ளார்.

தலிபான்கள் வியாழக்கிமை அவரைக் கொன்றனர். அவரை அடக்கம் செய்ய விடமாட்டோம். அவரது உடல் அழுக வேண்டும் என்று தலிபான்கள் கூறினர் எனவும் அவா குறிப்பிட்டார்.

எனினும் பஞ்ஷிரில் இடம்பெற்ற சண்டையின்போதே ரோஹுல்லா சலே கொல்லப்பட்டார் என தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

பஞ்ச்ஷீரின் மாகாண தலைநகரான பஜாராக் வீழ்ச்சியடைந்த பிறகும் தலிபான்களை எதிர்த்துத் தாம் போரிட்டு வருவதாக ஆப்கானிஸ்தான் துணை ஜனாதிபதி அம்ருல்லா சலே தலைமையிலான பஞ்ஷீர் கிளர்ச்சிக் குழுவினர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஈரானில் கொரோனாத் தொற்றிலிருந்து 45 லட்சத்துக்கும் மேற்பட்டோர் குணம்



ஈரானில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றிலிருந்து, மொத்தமாக 45 லட்சத்துக்கும் மேற்பட்டோர் குணமடைந்துள்ளனர்.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, மொத்தமாக 45 லட்சத்து ஒன்பதாயிரத்து 905பேர் குணமடைந்துள்ளனர்.

உலகளவில் கொவிட் தொற்றினால் அதிக பாதிப்பினை எதிர்கொண்ட எட்டாவது நாடாக விளங்கும் ஈரானில், இதுவரை 52 லட்சத்து 58ஆயிரத்து 913 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், ஒரு லட்சத்து 13ஆயிரத்து 380பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த24மணித்தியாலத்தில் மட்டும் வைரஸ் தொற்றினால், 21ஆயிரத்து 114பேர் பாதிக்கப்பட்டதோடு 445 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதுவரை வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட ஆறு லட்சத்து 35ஆயிரத்து 628பேர் அங்குள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் ஏழாயிரத்து 418பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.




# ஆப்கானுக்கு உதவுகிறது சீனா

ஆப்கானிஸ்தானுக்கு உணவுபொருள்கள் மற்றும் கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் உட்பட 20கோடி யுவான் (31மில்லியன் அமெரிக்க டொலர் கள்) மதிப்பிலான உதவிகளை அளிக்கவுள்ளதாக சீனா உறுதியளித்துள்ளது.

பெய்ஜிங், தலிபான் அரசாங்கத்துடன் தொடர்புக ளைப் பராமரிக்கத் தயாராக இருப்பதாக கூறிய நிலையில், இந்த உதவி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

புதிய இடைக்கால அரசாங் கத்தை நிறுவுவது ஆப்கானிஸ் தானில் ஒழுங்கை மீட்டெடுக்க தேவையான நடவடிக்கை என்று சீனா கூறியது.

அண்டை நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர் மாநாட்டில் பங்கேற்ற சீன வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யீ இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

பாகிஸ்தான் ஏற்பாடு செய்திருந்த இந்த மாநாட்டில் ஈரான், தஜிகிஸ்தான், துருக்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் பங்கேற்றன.

இந்த மாநாட்டில் புதிய தலி பான் அரசாங்கத்துக்கு தனது ஆதரவைத் தெரிவித்த வாங் யீ, ஆப்கானிஸ்தானில் நிலவி வந்த அரசியல் குழப்பத்துக்கு தலிபான்கள் முற்றுப்புள்ளி வைத்துள்ளனர் எனப் பாராட்டு தெரிவித்தார்.



# வேல்ஸுக்கு வந்தனர் முதல் ஆப்கானிஸ்தான் அகதிகள்

கடந்த மாதம் தலிபான்கள் அதிகாரத்தைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து காபூலில் இருந்து விமானம் மூலம் கொண்டு வரப்பட்ட முதல் ஆப்கானிஸ் தான் அகதிகள் குழு, வேல்ஸுக்கு வந்துள்ளனர்.

வேல்ஸ் முழுவதும் கிட்டத்தட்ட 50 குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்படுகின்றன என வேல்ஸ் அரசாங்கம் தெரிவித்துள்ளது. மொத்தமாக 230 ஆப்கானியர்கள் வேல்ஸில் மீள்குடியேற்றம் செய் யப்படுவதால், உர்த் இளைஞர் அமைப்பு தங்குமிடத்தை வழங்க உதவுகிறது.

தலிபான்கள் நாட்டின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றியபின், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 20,000 ஆப்கானியர் களை மீண்டும் குடியேற்றுவதாக பிரித்தானிய அரசாங்கம், உறுதியளித்த பிறகு இது நிகழ்கிறது.

இதுகுறித்து வேல்ஸின் சமூக நீதி அமைச்சர் ஜேன் ஹட் கூறுகையில், ‘ஆப்கானிஸ் தானில் நம் நாட்டிற்கு சேவை செய்த குடும்பங்கள் மற்றும் தனிநபர்களை இன்று வரவேற்கிறோம்.

வேல்ஸ் புகழிட தேசம் என்ற எங்கள் உறுதிமொழியை நாங்கள் தெளிவுபடுத்தியுள்ளோம்.

ஆப்கானிய மொழி பெயர்ப் பாளர்கள், அகதிகள் மற்றும் அவர்களது குடும்பங்கள் வரவேற்கப்படுவதை உறுதி செய்ய முடிந்த அனைத்தையும் செய்ய நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்’ என கூறினார்.



# தமிழகத்திற்கு புதிய ஆளுநர் நியமனம் பஞ்சாப் ஆளுநரானார் பன்வாரிலால்

தமிழகத்தின் ஆளுநராகப் பதவி வகித்துவந்த பன்வாரிலால் புரோகித்துக்கு சமீபத்தில் கூடுதல் பொறுப்பாக பஞ்சாப் ஆளுநர் பதவி வழங்கப்பட்டது. அதன் பின்னர் அவர் பஞ்சாப்புக்கான ஆளுநராக பதவிமாற்றம் செய்யப்பட்டு தமிழகத்திற்கு புதிய ஆளுநர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக ஜனாதிபதி மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நாகலாந்து ஆளுநராக இருந்த ஆர்.என்.ரவி தமிழகத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நாகலாந்து ஆளுநர் பதவி அசாம் மாநில ஆளுநராகவுள்ள ஜெகதீஷ் முக்திக்கு கூடுதல் பொறுப்பாக வழங்கப்பட்டுள்ளது. உத்தர காண்ட் ஆளுநராகப் பதவி வகித்த பேபி ராணி மவுரியாவின் ராஜினாமா ஏற்கப்பட்டுள்ளது. அந்த மாநிலத்தின் புதிய ஆளுநராக குர்மித் சிங் நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள 69 வயதான ஆர்.என்.ரவி பீகார் மாநிலம் பாட்னாவைச் சேர்ந்தவர். 1976 ஆம் ஆண்டு கேரள பிரிவு ஐ.பி.எஸ். அதிகாரியான இவர், இந்திய உளவு அமைப்பின் (ஐ.பி.) சிறப்பு இயக்குநராக பணியாற்றி 2012 இல் ஓய்வு பெற்றவர். அதன்பிறகு நாகா பயங்கரவாத அமைப்புகளுடன் பேச்சு நடத்தும் குழுவின் பிரதிநிதியாக மத்திய அரசு அவரை நியமித்திருந்தது. தனி மாநில கோரிக்கையை வலியுறுத்தி வந்த நாகா அமைப்புகளுக்கும் மத்திய அரசுக்கும் இடையே பேச்சு நடத்தி சுமுகத் தீர்வைக் காண பாடுபட்டவராக இவர் அடையாளப்படுத்தப்படுகிறார்.

2018 ஆம் ஆண்டு தேசியப் பாதுகாப்பு துணை ஆலோசகராக இவர் நியமிக்கப்பட்டார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நாகலாந்து ஆளுநராகப் பதவியேற்றிருந்தார்.

## ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்க அமெரிக்கா செல்கிறார் பிரதமர் மோடி





ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமெரிக்கா செல்லவிருக்கும் இந்தியப் பிரதமர் மோடி, அமெரிக்க அதிபர் ஜோ பைடனை சந்தித்துப் பேசவிருக்கிறார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

வரும் 26 ஆம் திகதி ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் இந்தியப் பிரதமர் மோடி உரையாற்றவிருக்கிறார். இதற்காக வரும் 22 ஆம் திகதி தனி விமானம் மூலம் அவர் அமெரிக்கா செல்கிறார். இந்தப் பயணத்தின்போது 23 ஆம் திகதி அமெரிக்க அதிபர் ஜோ பைடனை சந்தித்துப் பேச்சு நடத்த இந்தியப் பிரதமர் திட்டமிட்டுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. ஆப்கானிஸ்தான் விவகாரம், பயங்கரவாத அச்சுறுத்தல், சீனாவின் செயல்பாடுகள் என பல விடயங்கள் குறித்து இருவரும் ஆலோசனை நடத்துவர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தச்சந்திப்புக்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன என வெளியுறவுத்துறை அமைச்சக அதிகாரிகள் தகவல் அளித்துள்ளனர். பின்னர், செப்டெம்பர் 24 ஆம் திகதி அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் தலைவர்களுடனும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆலோசனை நடத்தவுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## தடுப்பூசி போடாத அரசு ஊழியர்களுக்கு பஞ்சாப் அரசினால் கட்டாய விடுமுறை



இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் கொரோனாப் பரவலைத் தடுக்கும் வகையில் தற்போது நடைமுறையில் உள்ள கட்டுப்பாடுகளை வரும் 30 ஆம் திகதிவரை நீடித்து மாநில முதல்வர் அமரீந்தர் சிங் உத்தரவிட்டுள்ளார்.

வரவிருக்கும் பண்டிகைக் காலத்தைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக முதல்வர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தியில், அரசியல் கூட்டங்கள் உள்ளிட்ட அனைத்து பொது நிகழ்வுகளிலும் அதிகபட்சம் 300 நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்றும், முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி ஆகிய நடைமுறைகளைக் கட்டாயம் பின்பற்றவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. பஞ்சாப் அரசு ஊழியர்கள் கட்டாயம் தடுப்பூசியின் முதல் தவணையையாவது போட்டிருக்க வேண்டும் எனவும், மருத்துவம் தவிர வேறு எந்தக் காரணத்திற்காகவும் தடுப்பூசி போடத் தவறிய அரசு ஊழியர்கள் செப்டெம்பர் மாதத்திற்குப் பின்னர் கட்டாயமாக விடுப்பில் அனுப்பப்படுவார்கள் என்றும் முதல்வர் அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது.

மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் பஞ்சாப் மாநிலத்தில் கொரோனாத் தொற்று குறைவாகவே உள்ளது. அங்கு நேற்று புதிதாக 29 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதோடு, இரண்டு பேர் இறந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## டுபாயில் மருத்துவ சிகிச்சை முடிந்து சென்னை திரும்பினார் விஜயகாந்த்

தே.மு.தி.க. நிறுவனரும், பொதுச் செயலாளருமான விஜயகாந்த் கடந்த ஓகஸ்ட் 30 ஆம் திகதி தனது இளைய மகன் சண்முக பாண்டியன் மற்றும் உதவியாளர்களுடன் டுபாய்க்குப் புறப்பட்டுச் சென்றார். கடவுச்சீட்டுச் சிக்கலால் சில நாள்கள் கழித்து, அவரது துணைவியார் பிரேமலதாவும் அங்கே பயணமாகியிருந்தார். சிகிச்சை நடைபெற்ற மருத்துவமனையில் விஜயகாந்த் குணமடைந்து ஆரோக்கியமான நிலையில் தனக்கு உதவிடும் தாதியர்களோடு எடுத்த படத்தை வெளியிட்டிருந்தனர். இதன் பின்னர், தற்போது விஜயகாந்த் சிகிச்சை முடிந்து சென்னை திரும்பி உள்ளார் என சென்னை விமான நிலையத்திலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கொரோனாப் பரிசோதனைகளை அதிகரிக்க மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அறிவுரை



தமிழகத்தில் கடந்த 24 மணிநேரத்தில் கொரோனாப் பாதிப்பு முதல் 1,587 லிருந்து அதிகரித்து 1,596 ஆகப் பதிவாகியது. இது அதற்கு முன்தின எண்ணிக்கையை விடச் சற்று அதிகமாகும்.

கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் 1,59,684 கொரோனா பரிசோதனைகள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் தினசரி கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 1,600 ஐ நெருங்கும் நிலையில் கொரோனாப் பரிசோதனைகளை அதிகரிக்க மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவிப்பை மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் சென்னை மாநகராட்சிக்கும் மருத்துவத்துறை முதன்மைச் செயலாளர் ராதா கிருஷ்ணன் கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

மக்கள் அதிகம் கூட வாய்ப்புள்ள இடங்களில் தடுப்பூசி போடுவதைத் திட்டமிட்டுத் துரிதப்படுத்த வேண்டும் எனவும், கொரோனாப் பாதிப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளதால் கொரோனா கண்டறியப்படும் நபருடன் தொடர்பிலிருந்த அனைவருக்கும் பரிசோதனை நடத்த வேண்டுமென்றும், நாளை 12 ஆம் திகதி நடைபெறவுள்ள தடுப்பூசி முகாமில் 18 வயதுக்கு மேற்பட்டோர் தடுப்பூசி போடுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# கிழக்கு மாகாணத்தில் மூன்றாவது அலையில் 772 மரணம்; 42,784 பேருக்கு தொற்று உறுதி



கிழக்கு மாகாணத்தில் கொரோனா மூன்றாவது அலையில் இதுவரை மொத்தமாக 42,784 நோயாளர்களும் 772 மரணங்களும் ஏற்பட்டுள்ளன.

மாகாணத்தில் உள்ள 4 பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிரிவுகளில் கொரோனா வைரஸின் டெல்டா பிறழ்வு தாக்கம் பரவலாக அதிகரித்துள்ளமை ஆய்வு கூட அறிக்கை மூலம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இதனால் கடந்த ஒகஸ்ட் மாதத்தின் மூன்றாம் நான்காம் வாரங்களில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையும் மரண எண்ணிக்கையும் அதிகரித்து காணப்பட்டது .

டெல்டா திரிவு என்பதை பற்றி பயப்பட வேண்டாம்.ஏனெனில் 2 தடுப்பூசிகளை பெற்றவர்களுக்கு இதன் தாக்கம்குறைவாக உள்ளதை எம்மால் அவதானிக்க கூடியதாக உள்ளது.தடுப்பூசிகளைநீங்கள் பெற்றுக்கொண்டாலும் இத்தாக்கங்களில் இருந்து பாதுகாக்க சில நாள்கள் செல்லும்.எனவே தேவையற்ற ஒன்று கூடல்களை தவிருங்கள்.முகக்கவசங்களை நேர்த்தியாக அணியுங்கள் சமூக இடைவெளிகளை பின்பற்றி கொள்ளுங்கள்.

மேலும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இறுதிப் பகுதியாகும் போது தொற்று நிலை குறைவடையும் என எதிர்பார்க்கிறோம் என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஆர்.எம். தௌபீக்தெரிவித்தார்.

நேற்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்

கிழக்கு மாகாணத்திற்கு தேவையான தடுப்பூசிகளை அரசாங்கம் வழங்கி கொண்டிருக்கிறது 30 வயதிற்கு மேற்பட்டவர்களில் இதுவரை முதலாவது மற்றும் இரண்டாவது தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளாதவர்கள் சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள தடுப்பூசி செலுத்தும் நிலையங்களுக்குச் சென்று தடுப்பூசியினை பெற்றுகொள்ள முடியும்.

30வயதிற்கும் மேற்பட்டவர்களின் தடுப்பூசிவழங்கல் இதுவரை கிழக்கு மாகாணத்தில் கிட்டத்தட்ட முதலாவது டோஸ் 90 வீதமானோரும், இரண்டாவது டோஸ் 75 வீதமானோருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 20 வயதிற்கும் 30 வயதிற்கும் உட்பட்டவர்களுக்கு தடுப்பூசிவிரைவில்வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றிநடக்க வேண்டும் என்றார்.



கட்டுப்பாட்டு விலைகளில் பொருள்கள் விற்கப்படுவதை அவதானிக்க

# திருக்கோவில் பிரதேசத்திற்கு 5 கண்காணிப்பாளர்கள் நியமனம்

அரசினால் தற்போது நடைமுறைப்படுத்தியுள்ள கட்டுப்பாட்டு விலைகளில் மக்களுக்கு வியாபாரிகள் பொருள்களை விற்பனை செய்கின்றார்களா என்பதனை கண்காணிக்கும் நோக்கில் திருக்கோவில் பிரதேசத்தில் ஐந்து கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருக்கோவில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனினால் நேற்று இந்த நியமனங்கள் இடம்பெற்று இருந்தன. இவ் நியமனங்கள் பாவனையாளர்கள் அதிகார சபையின் ஊடாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இவ் கண்காணிப்பாளர்கள் திருக்கோவில் பிரதேச செயலாளரின் நிருவாக எல்லைக் குட்பட்ட வர்த்தக நிலையங்களில் அரசின் சுற்று நிருபத்திற்கு அமைவாக கட்டுப்பாட்டு விலையில் பொருள்கள் விற்பனை முன்னெடுக்கப்படுகின்றனவா என கண்காணித்து பாவனையாளர் மற்றும் நுகர்வோர் அதிகார சபையின் மாவட்ட உத்தியோகத்தருக்கு அறிக்கை இடுதல் இவர்களின் பணியாகும்.

இவ்வாறு இவ் கண்காணிப்பாளர்களினால் அறிக்கை இடும் வர்த்தகர்களுக்கு மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் விசாரணை உத்தியோகத்தர் மேற்பார்வையின் ஊடாக சட்டநடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன், உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா, அம்பாறை மாவட்ட உதவி விசாரணை உத்தியோகத்தர் ரீ.சுதர்ஷன் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

# புதியவகை உழவு இயந்திரம் மட்டக்களப்பில் கண்டுபிடிப்பு

இலங்கையில் 45 நாள்களில் மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவரால் புதியவகை உழவு இயந்திரமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



குறித்த சாதனையை மட்டக்களப்பு களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த கோகுலரஞ்சன் எனும்இளைஞனே நிகழ்த்தியுள்ளார்.

குறித்த உழவு இயந்திரமானது பாவிக்க முடியாது என்ற நிலையில் வீசப்பட்ட உதிரிப்பாகங்களை வைத்துவெறும்45 நாள்களில் சிறு தொகைப் பணத்தையும்செலவு செய்தேதயாரித்துள்ளார்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட உழவு இயந்திரத்தின் வெள்ளோட்டம் அண்மையில் களுவாஞ்சிகுடியில் இடம் பெற்றது. இதன்போது சிறப்பான முறையில் விவாசாயத்தினை மேற்கொள்ளக் கூடிய வகையில் இவ் உழவு இயந்திரம் செயற்பட்டதனை அவதானிக்க கூடியதாக இருந்தது.



# கல்முனை பிரதான பஸ் தரிப்பு நிலையம் 1.87 கோடி ரூபா செலவில் அழகுபடுத்தல்

செழுமைமிக்க 100 நகரங்கள் – நகர அழகுபடுத்தும் திட்டத்தின்கீழ் கல்முனை பிரதான பஸ் தரிப்பு நிலையம் முதல் தடவையாக 1.87 கோடி ரூபா செலவில் கல்முனை மாநகர சபையால் நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து நவீனமயமாக்கப்படவுள்ளது.

அதற்கான ஆரம்பபெயர்ப்பலகை திரைநீக்கும் நிகழ்வு நேற்று மாலை கல்முனை மாநகர மேயர் சட்டத்தரணி எம்.எ.றக்கீப் தலைமையில் நடைபெற்றது.

நகர அபிவிருத்தி அதிகாரசபை பிரதிநிதி மாநகரசபை உறுப்பினர்கள் கலந்து கொண்ட இத்திட்ட ஆரம்ப நிகழ்வில் மேயர் றக்கீப், நகரஅபிவிருத்தி அதிகாரசபை பிரதிநிதித.தே.கூ. மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் ஆகியோர் திரைநீக்கம் செய்து வைத்தனர்.

பஸ்தரிப்பு நிலையம் காாப்பட இடப்பட்டு நவீனமயப்படுத்தப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# வருமானத்தை இழந்த குடும்பங்களுக்கு உலருணவு

கொரோனா அச்சுறுத்தலினால் வருமானத்தை இழந்த குடும்பங்களுக்கு உலருணவு வழங்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இராணுவத்தின் பல்வேறு பிரிவுகளால் கிழக்கு மாகாணம் எங்கும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பெரியநீலாவணை பகுதியில் உள்ள வறிய மக்களுக்கு உலருணவுப் பொருள்கள் அடங்கியபொதிகள் கல்முனைப்பிராந்திய இராணுவ மேஜர் சாந்த விஜேயகோனின் ஏற்பாட்டில் வழங்கி வைக்கப்பட்டு வருகின்றன.

இதன்போது நேற்று இடம்பெற்ற இந் நிவாரண செயற்பாட்டில் இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் அப் பகுதியில் சுகயீனமுற்றுள்ள குடும்ப தலைவர்கள், கணவனை இழந்த பெண் தலைமைத்துவ குடும்பங்களை இனங்கண்டு வீடு வீடாகச் சென்று வழங்கி வைத்தனர்.

குறித்த உலருணவு பொருள்களில் அரிசி, சீனி ,தேயிலை, பால் மா, உள்ளிட்ட பொருள்கள்உள்ளடங்குவதுடன்பலகுடும்பங்களுக்கு இப்பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# முதலாவது ரி-20 போட்டியில் தென்னாபிரிக்காவுக்கு வெற்றி!



இலங்கை அணிக்கெதிரான முதலாவது ரி-20 கிரிக்கெட் போட்டியில், தென்னாபிரிக்க அணி 28 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில், 1-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்க அணி முன்னிலை பெற்றுள்ளது.

கொழும்பு, ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. ஹெய்டன் மார்க்கம் 48 ஓட்டங்களையும் ரீஸா ஹென்ரிக்ஸ் 38 ஓட்டங்களையும் எடுத்தனர். இலங்கை அணியின் வனிந்து ஹசரங்க 2 விக்கெட்டுகளையும் சமீர, தீக்ஷன மற்றும் தசுன் சானக ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 164 என்ற வெற்றிஇலக்கைநோக்கிகளமிறங்கிய இலங்கை அணி, தனக்கான 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 135 ஓட்டங்களை மட்டுமே பெற, தென்னாபிரிக்க அணி 28 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. தினேஷ் சந்திமால் ஆட்டமிழக்காது 66 ஓட்டங்களையும் சம்மிக கருணாரத்ன ஆட்டமிழக்காது 22 ஓட்டங்களையும் சேர்த்திருந்தனர். தென்னாபிரிக்க அணியின் போர்ச்சுன், நோட்ஜே, மஹாராஜ், சம்ஸி மற்றும் பிரிடோரியஸ் ஆகியோர்ஒவ்வொருவிக்கெட்டினைக் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக ஹெய்டன் மார்க்கம் தெரிவு செய்யப்பட்டார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ரி-20 போட்டி நாளை நடைபெறவுள்ளது.

## அமெரிக்க ஓபன் டென்னிஸ் ஆடவர் பிரிவு இறுதிப்போட்டியில் ஜோகோவிச், மெட்வேடவ்



அமெரிக்க ஓபன் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டிகள் நடைபெற்று முடிந்த நிலையில் ஜோகோவிச், மெட்வேடவ் இருவரும் இறுதிப்போட்டியில் விளையாடத் தெரிவாகியுள்ளனர்.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் உலகின் முதல்நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஜேர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரவை எதிர்த்து விளையாடியிருந்தார்.

இப்போட்டியில், நோவக் ஜோகோவிச், 4-6, 6-2, 6-4, 4-6, 6-2 என்ற செட்களில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இரண்டாவது அரையிறுதிப் போட்டியில், கனடாவின் பெலிக்ஸ்ஆகர்அலியாசிமும்ரஷ்யாவின் டேனில் மெட்வேடவும் மோதினர். இப்போட்டியில், 6-4, 7-5, 6-2 என்ற நேர் செட்களில், ரஷ்யாவின் டேனில் மெட்வேடவ் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார். இறுதிப்போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.



அதிக கோல்கள் அடித்த தென்னமெரிக்க வீரர்

## பீலேயின் சாதனையை முறியடித்த மெஸ்ஸி

சர்வதேச கால்பந்தாட்டப் போட்டிகளில் அதிக கோல்கள் அடித்த தென்னமெரிக்க வீரர் என்ற சாதனையை லியொனல் மெஸ்ஸி படைத்துள்ளார்.

பியூனஸ் அயர்ஸ் நகரில் நேற்று நடைபெற்ற உலகக்கிண்ணக் கால்பந்தாட்டத் தகுதிச்சுற்று போட்டியில் ஆர்ஜென்டீனா 3-0 என்ற கோல்கள் கணக்கில் பொலிவியா அணியைத் தோற்கடித்தது.

ஆர்ஜென்டீனா அணிக்கான மூன்று கோல்களையும் அணித்தலைவர் லியொனல் மெஸ்ஸியே அடித்து தனது அணியை வெற்றிக்கு அழைத்துச்சென்றிருந்தார்.

இந்த கோல்கள் மூலமாக ஆர்ஜென்டீனா அணிக்காக மெஸ்ஸி அடித்துள்ள கோல்களின் எண்ணிக்கை 79 ஆக அதிகரித்துள்ளது. இதன்மூலம் சர்வதேசப் போட்டிகளில் அதிக கோல்கள் அடித்த தென்னமெரிக்க வீரர் என்ற பெருமையும் மெஸ்ஸிக்கு கிடைத்துள்ளது.

இதற்கு முன்னர் 77 கோல்கள் அடித்து பிரேஸில் வீரர் பீலே படைத்திருந்த சாதனையை மெஸ்ஸி தற்போது முறியடித்துள்ளார். பீலே 92 போட்டிகளில் 77 கோல்கள் அடித்திருந்தார். அதேவேளையில் மெஸ்ஸி 153 ஆட்டங்களில் விளையாடி பீலேயின் சாதனையை முறியடித்துள்ளார்.

## ரி-20 உலகக்கிண்ணத்தொடரில் ஆப்கான் அணி பங்கேற்காது

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் ஆப்கானிஸ்தான் விளையாடுவதற்கான சாத்தியக்கூறுகளே இல்லை என்று ஆஸ்திரேலிய டெஸ்ட் அணியின் தலைவர் டிம் பெய்ன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய வானொலி ஒன்றுக்கு பேட்டியளித்துள்ள அவர், ஆப்கானிஸ்தானில் பெண்கள் கிரிக்கெட்டுக்கு தலிபான்கள் தடை விதித்துள்ளதையடுத்து அந்த நாட்டு அணிக்கு எதிராக விளையாட மற்ற நாடுகள் மறுக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

தலிபான்களின் முடிவால், வரும் நவம்பர் மாத இறுதியில் தொடங்கவிருந்த ஆப்கானிஸ்தான் - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் ரத்துச் செய்யப்படும் என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் அறிவித்திருப்பதை வரவேற்பதாகவும் டிம் பெய்ன் கூறியிருக்கிறார்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் விதிகளின்படி, டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் அனைத்து நாடுகளிலும் மகளிர் அணியும் இருக்க வேண்டும் என்பது கட்டாயமாகும் என்பதை டிம் பெய்ன் சுட்டிக்காட்டியுள்ளார்.



# இறக்குமதிக்கான உத்தரவாதத்தொகை விவகாரம்; அரசாங்கத்தின் முட்டாள் தனம் என்கிறது ஜே.வி.பி.

அத்தியாவசியமற்ற 623 பொருள்களின் இறக்குமதிக்கான உத்தரவாதத் தொகையை மத்தியவங்கி அதிகரித்திருக்கின்றது.

கொரோனா வைரஸ் பரவலின் பின்னரான காலப்பகுதியில் கல்விச்செயற்பாடுகள், பெரும்பாலான தொழில் நடவடிக்கைகள் என அனைத்தும் ஒன்லைன் ஊடாகவே முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், மேற்படி அத்தியாவசியமற்ற பொருள்களின் பட்டியலில் கையடக்கத்தொலைபேசி, தொலைக்காட்சி போன்றவையும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றமை முட்டாள்தனமான விடயமாகும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் அரசாங்கம் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு நீண்டகால ரீதியில் தீர்வுகாண்பதைவிடுத்து, முறையற்ற கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு குறுங்கால நோக்கிலான தற்காலிக நடவடிக்கைகளையே முன்னெடுத்துவருகின்றது.

ஆனால் அதன் பாதக தாக்கங்களை எதிர்கொள்ளவேண்டியநிலையில் பொதுமக்களே இருக்கின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக்காரியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு

அந்நியச்செலாவணியை சாதகமான மட்டத்தில் பேணல் மற்றும் அநாவசியமான இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தல் என்பவற்றுக்காக அத்தியாவசியமற்ற பொருள்களுக்கான இறக்குமதி உத்தரவாதத்தொகையை அதிகரிப்பதாக மத்திய வங்கி அறிவித்திருக்கின்றது. இந்த அறிவிப்பின்படி மத்திய வங்கியினால் அத்தியாவசியமற்ற பொருள்களாகப் பட்டியலிடப்பட்டுள்ள 623 பொருள்களை இறக்குமதி செய்யும்போது ஆரம்பத்திலேயேஅதற்கானமுழுத்தொகையையும் பணமாகச் செலுத்தவேண்டும்.

அதன் விளைவாகப் பொருள்களின் விலைகள் அதிகரிப்பதுடன் இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் அளவில் வீழ்ச்சியேற்படும்.

அதேவேளை மேற்படி அத்தியாவசியமற்ற பொருள்களின் பட்டியலில் கையடக்கத்தொலைபேசி போன்றவையும் உள்ளடக்கப்பட்டுள்ளன. கொரோனா வைரஸ் பரவலின் பின்னரான காலப்பகுதியில் கல்விச்செயற்பாடுகள், பெரும்பாலான தொழில் நடவடிக்கைகள் என அனைத்தும் ஒன்லைன் ஊடாகவே முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், கையடக்கத் தொலைபேசி என்பது அத்தியாவசியமான பொருளாக மாறியிருக்கின்றது. அதுமாத்திரமன்றி அந்தப் பட்டியலில் உள்ளாடையும் சேர்க்கப்பட்டுள்ளது.

பொய்யான வாக்குறுதிகளை வழங்கி மக்களைஏமாற்றிவரும்அரசாங்கத்துக்கு அது தேவையற்ற பொருளாக இருந்தாலும், நாட்டுமக்களுக்கு அது அத்தியாவசியமான பொருளாகும்.

எனவே அரசாங்கம் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு நீண்டகால ரீதியில் தீர்வுகாண்பதைவிடுத்து, முறையற்ற கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு குறுங்கால நோக்கிலான தற்காலிக நடவடிக்கைகளையே முன்னெடுத்துவருகின்றது. ஆனால் அதன் பாதக தாக்கங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் பொதுமக்களே இருக்கின்றனர்.

அரசாங்கத்துக்கு வாக்களித்த 69 லட்சம் மக்களும் இப்போது அதன் செயற்பாடுகளால் பெரிதும் அதிருப்தியடைந்திருக்கின்றார்கள்.

எனவே, இவ்வாறு எவ்வித கட்டுப்பாடுமின்றி பொருள்களின் விலைகளை அதிகரிப்பதை உடனடியாக முடிவிற்குக்கொண்டுவருமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். அதேவேளை பொதுமக்களிடமிருந்தும் அந்தக்கோரிக்கை வலுப்பெறவேண்டியது அவசியமாகும்.

தற்போது பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கும் பொதுமக்கள்மீது மேலும் அழுத்தங்களை ஏற்படுவதை அரசாங்கம் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

அத்தோடு அனைவருக்கும் சமத்துவமான பொருளாதாரத்தையும் நேர்மையான அரசியல் கலாசாரத்தையும் உருவாக்கவேண்டும். அத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தாமல் நாட்டை முன்கொண்டுசெல்லமுடியாது என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். - என்று குறிப்பிட்டார்.

# தனிமைப்படுத்தல் விதி மீறி புதைக்கப்பட்டது சடலம்!

## மனைவியும், மகளும் கொவிட் தொற்றால் மரணம்



தனிமைப்படுத்தல் சட்டவிதி முறைகளை மீறி புத்தளம் வெப்பமடுவ பொதுமயானத்தில் புதைக்கப்பட்ட 56 வயது நபரின் சடலம், புத்தளம் நீதிவான் முன்னிலையில் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டது.

மூன்று பிள்ளைகளின் தந்தையின் சடலமே இவ்வாறு தோண்டி எடுக்கப்பட்டது.

குறித்த நபர் கடந்த 4ஆம் திகதி அவரது வீட்டில் மரணமடைந்தார். இதையடுத்து அவரது உடல் தனிமைப்படுத்தல் சட்டவிதி முறைகளை மீறி அன்னைறய தினமே வெப்பமடுவ பொது மயானத்தில் புதைக்கப்பட்டது.

குறித்த நபர் மரணமடைந்த இரண்டு தினங்களின் பின்னர், அவரது மகள் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். அவரது மனைவியும்உடல்நலக்குறைபாடு காரணமாக வீட்டில் மரணமடைந்த நிலையில், அவ ரது சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டது. குறித்த இருவரும் கொவிட் வைரஸ் தொற்றுக் காரணமாக உயிரிழந்தமை பி.சி.ஆர். பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டது.

எனவே, தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறும் வகையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸாருக்கு அறிவிக்காது புதைக்கப்பட்ட நபர் கொவிட் தொற்றால் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகம் நிலவுகின்றது எனப் புத்தளம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், புத்தளம் பொலிஸில் முறைப்பாடு செய்தனர். முறைப்பாட்டையடுத்து புத்தளம் பொலிஸார் இந்த விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றதுடன், சடலத்தை மீண்டும் தோண்டி எடுப்பதற்கும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கும் நீதிமன்றத்தின் அனு மதியைக் கோரினர். இதற்கான அனுமதியை நீதிமன்றம் வழங்கியதையடுத்து, புத்தளம் நீதிவான் அசேல டி சில்வா முன்னிலையில் சடலம் நேற்று வெள்ளிகிழமைமீண்டும்தோண்டி எடுக்கப்பட்டது.

மிகவும் இரகசியமான முறையில் குறித்த நபரின் இறுதிக் கிரியையில் பங்கேற்ற 9 குடும்பங்களைச் சேர்ந்த 30 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.09.2021இல் வெளியிடப்பெற்றது.